**தலைப்பு 19 – பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு - 19 பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள் பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 யூன் 21 ஆம் திகதி பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவரின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

அலுவலகத்திற்காக செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 84.45 மில்லியனாக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 65.75 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 18.70 மில்லியன் அதாவது, 22.14 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக, சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழும் | 71.75 | 61.13 | 10.62 | 14.80 |
| மூலதன | 12.70 | 4.62 | 8.08 | 63.62 |
| மொத்தம் | 84.45 | 65.75 | 18.70 | 22.14 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அலுவலகத்திற்குரிய விடய இலக்கம் 01901 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 2.26 | 1.92 | 1.26 | 1.76 | 8.00 | 4.81 |

## 2.3 கணக்காய்வு அவதானிப்பு

பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புகளின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அலுவலகத்தினால் கீழே குறிப்பிடப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (அ) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | இழப்புகள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | பேணப்பட்டிருக்கவில்லை |
| (இ) | கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகைப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | குழுக் கூட்ட அறிக்கை | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.3(அ) ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை |
| (உ) | கேள்வி கோரல் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.2.1 ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஊ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. |
| (எ) | கணக்காய்வு ஐய வினாப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 452(1) | நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஏ) | கிடைக்கின்ற காசோலைகள், காசுக் கட்டளைகள் போன்றவைகளுக்கான பதிவேடு | நிதிப்பிரமாணம் 451 | நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை |
| (ஐ) | அடியிதழ் சேர் புத்தகப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 | நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை |

### 3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

எழுபது உத்தியோகத்தர்களுக்கு 03 நாள் வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று ரூபா 337,697 செலவில் நடாத்தப்பட்டிருந்தது. அதில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கு தங்குமிட வசதிகள் மற்றும் உணவு, பானங்களுக்காக ரூபா 287,846 செலவிடப்பட்டிருந்தது. அந்த செலவினங்களை திருப்திகரமானதாக சான்றுறுதி செய்வதற்குத் தேவையான உத்தியோகத்தர்களின் வரவினை உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளித்தல்

அலுவலகத்திற்கு மீளாய்வாண்டின்போது சமர்ப்பிக்கப்பட்ட 01 கணக்காய்வு ஐய வினாவிற்கு 2016 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அலுவலகத்தினால் 2015 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்பட்டு, பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின்படி ரூபா 4.45 மில்லியன் நிதி ஏற்பாடு பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அந்த நிதி ஏற்பாடுகளில் ரூபா 3.77 மில்லியனைப் பயன்படுத்துவதற்காக 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அலவலகத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த அறிக்கை 2016 யூன் 15 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 இணங்காமை

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
| --- | --- | --- |
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 139(4), 264(1) | 3,227,624 | கொடுப்பனவுகளுக்காக முறையான பற்றுச்சீட்டு பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 245, 257 | 378,517 | மூன்று கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்கு உரிய கொடுப்பனவு உறுதிப்படுத்தலின்றி கொடுப்பனவு செய்யப்பட்டமை |
| (ஆ) குடியரசின் வர்த்தமானி அறிவித்தல் | | |
| 2008 சனவரி 01 ஆந் திகதிய 1530/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் | 337,697 | ஏதாவதொரு தரப்பினருக்கு ரூபா 25,000 இற்கு மேற்பட்ட பணம் செலுத்தப்படும்போது, முத்திரைக் கட்டணம் அறவிடப்படாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

## 3.6 செயலாற்றல்

2015 ஆம் ஆண்டின் எதிர்கட்சித் தலைவர் அலவலகத்தின் செயலாற்றலை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்குமாறு 2016 மே 20 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கோரப்பட்டிருந்தும் 2016 யூலை 15 ஆந் திகதியளவிலும் அந்த செயலாற்றல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

**அரசின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் நடைமுறைகளைப் பின்பற்றாமை**

அலவலகத்தின் உத்தியோகத்தர்களுக்கு 03 நாள் வதிவிடப் பயிற்சி செயலமர்வொன்றை நடாத்துவதற்கு அரசின் கொள்வனவு வழிகாட்டிகளுக்கு புறம்பாக மூன்று போட்டி நிறுவனங்களிலிருந்து கூறுவிலை கோரப்படாமல் தனிப்பட்ட விருப்பத்தின் அடிப்படையில் நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 337,697 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**3.8 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியணியும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 03 | 03 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 03 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 12 | 12 | 0 |
| (iv) | ஆரம்ப நிலை | 18 | 14 | 4 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 30 | 10 | 20 |
| | மொத்தம் | 66 | 42 | 24 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதியளவில் 24 வெற்றிடங்கள் காணப்பட்டிருந்தும் 2015 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதி எற்பாடு சேமிக்கப்பட்டிருந்தும் அந்த சேமிப்பு தொடர்பாக பதவியணியனரின் வெற்றிடமாகக் காணப்பட்டமைக்குத் தாக்கமளித்திருக்கவில்லை.